கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு 118 (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) இல் திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேமிப்புக் கணக்கு கட்டுப்படுத்தப்படும்:

1. வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடிகின்ற ஓர் ஆவணம் (உதா: தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம்) மற்றும் முகவரியைச் சரிபார்க்கக்கூடிய ஓர் ஆவணம் (உதா: சமீபத்தில் வழங்கப்பட்ட மின்/நீர்க் கட்டண பில், வங்கி கணக்குக் கூற்று) ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியினால் அங்கீகரிக்கப்படக் கூடிய ஒரு நபர் / நபர்கள் கணக்கைத் திறக்கலாம்.

2. சேமிப்புக் கணக்கை பின்வரும் நபர்கள் திறக்கலாம்:

(அ) ஒரு தனி நபருக்கு, அவரின் பெயரில்

(ஆ) ஆணையில் (mandate) பணம் மீளப் பெறும் அதிகாரம் பற்றி தெளிவான அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் அவர்களின் பெயரில் கூட்டுக் கணக்கைத் தொடங்கலாம்.

(இ) வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட கூடிய ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கம்பனி, சங்கம், கழகம் அல்லது அதை ஒத்த ஓர் அமைப்பின் பெயரில்.

3. ஒவ்வொரு கணக்கிற்கும் ஓர் கணக்கிலக்கம் வழங்கப்படும் என்பதுடன், வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் அந்த இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுத்து விட்டு மேற்படி இலக்கத்தை மாற்றுவதற்குக் வங்கி க்கு உரிமை உண்டு.

4. இந்தக் கணக்கானது, கணக்குக் கூற்று வழங்கும் அடிப்படையிலான ஒரு சேமிப்புக் கணக்காகும். வங்கியின் விருப்புரிமையின் படி விசேட சூழ்நிலைகளைத் தவிர இந்தக் கணக்குகளுக்கு கணக்குப் புத்தகம் வழங்கப்பட மாட்டாது.

5. சேமிப்புக் கணக்கின் நோக்கத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிறுவனங்கள் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**விசேட சூழ்நிலைகளில் வழங்கப்படும் கணக்குப் புத்தகங்களுக்கு ஏற்புடையதாகும் நிபந்தனைகள்**

6. கணக்குப் புத்தகத்தில் கணக்கு வைத்திருப்பவர் எந்தப் பதிவுகளையும் செய்யக் கூடாது என்பதுடன், தேவைப்படும் போது கணக்கு வைத்திருப்பவர் கணக்குப் புத்தகத்தை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். கணக்குப் புத்தகத்தை இன்னொருவரின் பெயருக்கு மாற்றக் கூடிய அல்லது உரிமைசாட்டக் கூடிய ஒன்றல்ல என்பதுடன், இதைப் பிணையாக வைக்கவும் முடியாது.

7. மேற்கொள்ளப்படுகின்ற பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பிறகும் சரிபார்க்க வேண்டும் என்பதுடன், ஏதேனும் பிழை அல்லது தவறு இருந்தால், உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

8. கணக்குப் புத்தகம் தொலைந்து விட்டாலோ அல்லது அழிந்து விட்டாலோ, கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக அது பற்றி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

9. புதிய உள்ளடக்கங்களை நாளதுவரைப் படுத்துவதற்காக கணக்குப் புத்தகம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என்பதால் அல்லது பற்று / வரவு மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் என்பதால், கணக்குப் புத்தகம் எப்போதும் சேமிப்புக் கணக்கின் சரியான நிலுவையைக் காட்டாது.

10. வங்கி, கணக்கிற்கான கணக்கு கூற்றுகளை அவ்வப்போது வெளியிடும். கணக்கு வைத்திருப்பவர் வங்கியிடமிருந்து தொடர்புடைய கணக்குக் கூற்றின் பிரதிகளைக் கோரும் பட்சத்தில், வங்கியின் பிரகடனம் செய்யப்பட்டுள்ள

கட்டணங்களின் படி இந்தச் சேவையை வழங்குவதற்காக ஒரு கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

11. வழங்கப்பட்ட கணக்குப் புத்தகத்தைத் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். கணக்குப் புத்தகத்தில் கடைசியாக ஒரு கொடுக்கல் வாங்கல் பற்றிய பதிவுகள் உள்ளடக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் கணக்குப் புத்தகம் புதுப்பிக்கப்படாவிட்டால், ஒரு நகல் அல்லது கணக்குக் கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் விவரங்கள் வங்கியிடமிருந்து பின்னர் கோரப்பட்டால், அத்தகைய சேவையை வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிக்க வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

**கணக்குக் கூற்று வழங்கப்படும் கணக்குகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் நிபந்தனைகள்**

12. வேறு விதமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, வங்கியால் தீர்மானிக்கப்படும் கால இடைவெளியில் செயல்நிலையில் உள்ள கணக்குகளுக்கு வங்கி அவ்வப்போது கணக்கு நிலுவையைக் குறிப்பிடும் கணக்குக் கூற்றுக்களை வெளியிடும். வங்கியின் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டணங்களுக்கு ஏற்ப அத்தகைய கணக்கு நிலுவை பற்றிய கூற்றுக்களின் பிரதிகளை வழங்குவதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

13. கணக்குக் கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகும். வங்கியிடமிருந்து கணக்குக் கூற்றுக்களின் □□□□□□□ பிரதிகள் கோரப்பட்டால், வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வங்கிக் கட்டணங்களுக்கு இணங்க இந்த சேவையை வழங்குவதற்கான ஒரு கட்டணத்தை அறவிடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**வைப்புச் செய்தல்**

14. நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேமிப்புக் கணக்கைத் திறப்பதற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 10,000/- ஆகவோ அல்லது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகையாகவோ இருக்கும்.

15. தேவைக்கேற்ப எந்த நேரத்திலும் பணத்தை வைப்புச் செய்யலாம். அனைத்து பண வைப்புக்களும் பணம்வைப்பு இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படுவதாயின், பண வைப்பு முனையத்தில் இலத்திரனியல் சரிபார்ப்புடன் கூடிய பற்றுச்சீட்டை வழங்குவதன் மூலம் மற்றும்/அல்லது கணக்குப் புத்தகத்தில் (ஏற்புடையதாகுமிடத்து) பதிவுக்குறிப்பை இடுவதன் மூலம் அல்லது தனிப்பட்ட முறையில் வைப்பிலிடுவதாயின் வைப்புச் சீட்டில் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அதிகாரியின் கையொப்பத்துடன் கையால் குறிப்பு இடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

16. இக்கணக்கிற்கு பணம் வைப்புச் செய்வதற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, வங்கியின் பெயருக்கு வரையப்பட்ட மற்றும் பயனாளியின் பெயர் மற்றும் கணக்கு இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் மூலம் செய்யப்படும் வைப்புக்கள் கிளை முகாமையாளரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளப்படலாம். காசோலை மூலம் வைப்பு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், காசோலை மூலம் கிடைக்கின்ற வருமானம் (அப்படி ஏதேனும் இருந்தால்) வைப்பு செய்யப்பட்ட வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டாலன்றி, (தற்காலிக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல்) காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்புச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் காசோலைகள் தொடர்பில் வங்கி வாடிக்கையாளருக்கு பொறுப்புக் கூறாது.

17. வேறொரு வங்கியின் பெயரில் வரையப்பட்ட வரைவோலைகள் ("Other Bank Drafts") மற்றும் ஏனைய வங்கிகளில் பராமரிக்கப்படும் கணக்கின் கீழ் வரையப்பட்ட காசோலைகளை ("Other Bank Cheques") வாங்குவதா அல்லது சேகரிப்புக்கு அனுப்புவதா என்பதை வங்கி தனது விருப்புரிமையின் படி தீர்மானிக்கும். பணம் செலுத்தும் வங்கி பின்பு பணம் செலுத்த நிராகரிக்குமாயின், வாங்கிய அனைத்து பொருட்களுக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு எதிராக முழு நிவாரணத்தை (கட்டணங்கள் உட்பட) வங்கி மேற்கொள்ளும். காசோலை திரும்பியமை குறித்த அறிவிப்பு கிடைத்த பிறகு கணக்கு பற்று வைக்கப்படும். கணக்கில் வரவு வைக்கப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், காசோலை வழங்கப்பட்ட வங்கியால் அது காசாக்கப்படும் வரை பணம் எடுக்க முடியாது. பணம் எடுக்க முடிகின்ற திகதி குறிப்பிடப்படுவது, சுட்டிக்காட்டும் நோக்கங்களுக்காக மட்டுமே ஆகும்.

18. வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கின் கீழ் வரையப்பட்ட காசோலைகள் அல்லது வங்கியின் பெயரில் வரையப்பட்ட வரைவோலை கணக்கின் வரவு வைப்பதற்காக செலுத்தப்படும் போது, வங்கி அதன் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டணங்களுக்கு ஏற்ப கையாளுதல் கட்டணங்களைக் அறவிடும். அத்தகைய வைப்புத் தொகைகளின் மதிப்பீட்டு திகதி வங்கியின் நடைமுறையில் உள்ள கொள்கையின் அடிப்படையில் வங்கியால் தீர்மானிக்கப்படும். கணக்கில் வரவு வைப்பதற்காக வேறொரு வங்கியின் காசோலை அல்லது மற்றொரு வங்கியின் வரைவோலை வாங்கும் போது, வங்கி அதை கணக்கில் வரவு வைப்பதற்கான கையாளுதல் கட்டணத்துக்கு மேலதிகமாக வங்கியால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டணங்களின் படி காசோலையின் முக மதிப்பில் இருந்து தள்ளுபடி கட்டணத்தை வங்கி அறவிடும்.

19. மேலே கூறப்பட்டுள்ள முறையைத் தவிர, காசோலைகளின் தீர்வானது கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன், வைப்புக் காசோலைகள், வரைவோலைகள், இலாபப் பங்குகள், செயலாணைகள் மற்றும் கணக்கு வைத்திருப்பவர் அல்லது மூன்றாந் தரப்பின் பெயரில் வரையப்பட்ட வேறு அம்சங்களை ஏற்க மறுக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**பணம் மீளப் பெறல்**

20. கணக்கு வைத்திருப்பவர் கணக்கிலிருந்து ஒரு மாதத்திற்கு 1 முறைக்கு மேல் பணம் எடுத்திருந்தால், கீழே உள்ள 23வது பிரிவின் படி கணக்கு வைத்திருப்பவருக்கு போனஸ் வட்டிக்கு உரிமை கிடைக்காது என்பதுடன், இந்த வரம்பு வங்கியின் விருப்புரிமையின் படி அவ்வப்போது மாற்றப்படலாம்.

21. ஏனைய வங்கிகளின் ATM களில் இருந்து பணம் எடுப்பது உட்பட பணம் மீளப் பெறுதல் தொடர்பான அனைத்து கட்டணங்களும் வங்கியின் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டணங்களின் படி செலுத்தப்பட வேண்டும்.

22. இதில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, வங்கியானது, தபால் மூலம் பெறப்பட்ட அல்லது வங்கியின் ஏதேனும் கிளைக்கு நியாயமான நேரத்திற்குள் வழங்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவ□□□□ எழுத்துப் பூர்வ அறிவுறுத்தல்களின் படி (நிலையான கட்டளைகள் உட்பட) மட்டுமே செயல்படும். வங்கிக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தம் இல்லாமல் தொலைநகல், மின்னஞ்சல் அல்லது பிற மின்னணு வழிமுறைகள் மூலம் பெறப்படும் எந்த அறிவுறுத்தல்களையும் வங்கி ஏற்காது. பின்வரும் பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள படி, "பணம் மீளப் பெறுதல்கள்" என்ற பிரயோகத்தில் ஒரு கணக்கில் பற்று வைப்பதற்குக் காரணமான ஒரு கணக்கு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்களும் உள்ளடங்கும்.

**வட்டி**

23. நாளாந்தம் நிலவும் நிலுவை மீது தற்போதைய விகிதத்தில் கணக்கிடப்படும் வட்டி மாதாந்தம் (பொதுவாக மாதத்தின் கடைசி நாளில்) சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

24. பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைக்கு மேலதிகமாக, கணக்கு வைத்திருப்பவர் வங்கியால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் குறைந்தபட்ச மாதாந்த நிலுவையைப் பேணி வந்திருந்தால், அத்தகைய போனஸ் வட்டி மாதாந்தம் (பொதுவாக மாதத்தின் கடைசி நாளில்) கணக்கில் வரவு வைக்கப்படும்.

25. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அல்லது அவ்வாறான விடயங்களுக்காக சட்டத்தால் தாபிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரசபையும் பரிந்துரைக்கின்றவாறு நிறுத்திவைப்பு வரி அல்லது வட்டி செலுத்துதலின் மீது செலுத்த வேண்டிய வேறேதும் வரிகள் சம்பந்தப்பட்ட காலத்திற்கு (அத்தகைய விகிதங்கள் அல்லது விகிதங்களில்) செலுத்த வேண்டிய வட்டியிலிருந்து வங்கியால் கழிக்கப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரசபையால் பின்னர் கோரிக்கை விடுக்கப்பட்டால், □□□□□□□ அறிவித்தலும் கொடுக்காமல் எந்த நேரத்திலும் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து செலுத்தப்படாதிருந்த வரியைப் அறவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**பொதுவானது**

26. கணக்கின் நிலுவை ரூ. 1,000/- அல்லது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் பிரிதொரு தொகையை விடவும் குறைவாக இருந்தால், வங்கி அதன் தற்றுணிபின் படி வங்கியால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டண அறவீடுகளுக்கு இணங்க ஒரு சேவைக் கட்டணத்தை விதிக்கலாம் மற்றும்/அல்லது போனஸ் வட்டி உட்பட வட்டியை நிறுத்திவைக்கலாம் அல்லது குறைக்க

லாம்.

27. குறைந்தபட்ச இருப்புக்கான கட்டணத்தை அறவிடுவதற்குப் போதுமான நிதி இல்லாத பட்சத்தில், அவ்வாறு ஒன்று சேர்ந்துள்ள கட்டணங்களை கணக்கில் நிலுவைத் தொகை போதுமானதாகும் போது உடனடியாக அறவிடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

28. எந்தவொரு நேரத்திலும் கணக்கு இருப்பு பூச்சியமாக இருந்தாலோ அல்லது குறைந்தபட்ச இருப்புக்கான கட்டணத்திற்குக் குறைவாக இருந்தாலோ, கணக்கை இடைநிறுத்துவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

29. வங்கியின் வழமையான வியாபார நடவடிக்கைகளில் அறிவித்தல் கொடுத்துவிட்டு எந்த நேரத்திலும் கணக்கை மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

30. கணக்கு வைத்திருப்பவரால் கணக்கு திறக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் அது மூடப்பட்டால், வங்கியின் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டண அறவீடுகளுக்கு இணங்க காணப்படுகின்ற நிலுவைத் தொகையில் இருந்து கையாளுதல் கட்டணத்தைக் கழிக்க மற்றும்/அல்லது போனஸ் வட்டி உட்பட வட்டியைத் தடுத்துவைக்க அல்லது கழிக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

31. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி கணக்கு வைத்திருப்பவர் செலுத்த வேண்டிய எந்தவொரு கட்டணங்கள் மற்றும்/அல்லது வரிகளை நடப்பு மாதத்தில் அல்லது அதற்கு அடுத்த மாதத்தில் அல்லது கணக்கு மூடப்படுவதற்கு முன் வசூலிக்க கணக்கு வைத்திருப்பவர் இத்தால் வங்கிக்கு தனது சம்மதத்தை தெரிவித்து அதற்கான அதிகாரத்தையும் அளிக்கிறார்.

32. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் திருத்துவதற்கு வங்கிக்கு அதன் விருப்புரிமையின் பேரில் உரிமை உள்ளது என்பதுடன் அத்தகைய எந்தத் திருத்தமும் கணக்கு வைத்திருப்பவரைக் கட்டுப்படுத்தும். அத்தகைய திருத்தங்கள் பற்றிய அறிவிப்பை (ஏதும் இருப்பின்) வங்கி அதன் வழக்கமான வியாபார நடவடிக்கைகளின் போது வழங்கும்.

33. வங்கியின் வழக்கமான வியாபார நடவடிக்கைகளின் போது கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவிப்பதன் மூலம் எந்த நேரத்திலும் நேஷன் மேக்ஸ் போனஸ் சேவைத் திட்டத்தை வாபஸ் பெறுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. கணக்கை நிர்வகிக்கும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வங்கியால் குறிப்பிடப்பட்ட ஒரு கணக்கு வகைக்கு மேற்படி கணக்கு மாற்றப்படும்.

34. சட்டம், அரசாங்க ஒழுங்குவிதிமுறைகள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள் மூலம் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ளும் தேவை ஏற்பட்டால், இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தானாகவே அதற்கேற்ப திருத்தப்படும்.

35. கணக்கு வைத்திருப்பவரின் நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவைக் கணக்கு அல்லது வாடிக்கையாளரின் வங்கிக்கான எந்தவொரு பொறுப்பும் வாடிக்கையாளரின் வேறு ஏதேனும் கணக்குடன் ஒருங்கிணைத்து அல்லது ஒன்றோடொன்று இணைத்து நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு தொகையையும், வாடிக்கையாளரால் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ள வேறு ஏதேனும் ஒரு தொகையை வேறு ஏதேனும் ஒரு கணக்கிற்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு வழியில், அத்தகைய பொறுப்புக்கள் உண்மையானதாகவோ அல்லது நிச்சயமற்றதாகவோ, முதன்மையானதாகவோ அல்லது பிணையாகவோ மற்றும் பலதோ அல்லது கூட்டாகவோ அல்லது ஒன்றிணைக்கப்பட்டதாகவோ இருந்தாலும் கூட, சாட்டுவதற்கு அல்லது பரிமாற்றம் செய்வதற்கு வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புதல் அளித்து அதற்காக வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார்.

36. வங்கியின் கருத்துப்படி, கணக்கின் தகவல்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் எந்தவொரு இடத்திற்கும் இடமாற்றுவதற்கு (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது வைத்துக் கொள்வதற்கும் மற்றும் வங்கியில், அதன் தலைமையகத்தில், கிளை அலுவலகங்களில் அல்லது வழங்கப்படுகின்ற எந்தவொரு தரவுகள் தரப்படுத்தும் சேவையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆட்கள் மற்றும் நிருவாகம் மற்றும் உள்ளக மேற்பார்வைத்

தேவைகள் உள்ளிட்ட எந்தவொரு அலுவலுக்காகவும் மேற்படி இடமாற்றல் (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல் அல்லது வைத்துக் கொள்ளல் அவசியம் எனக் கண்டால், கணக்குக் கூற்றுகளை அச்சிடல் மற்றும் தபாலிடல் அல்லது அதை ஒத்த சேவை வழங்குவதற்காக வங்கியுடன் தொடர்புள்ள ஆட்களுக்கு அந்தத் தரவுகளுக்குள் பிரவேசிக்க முடியும்.

37. அடுத்த காலமுறை நிலுவைக் கூற்றை வெளியிடுவதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ அல்லது கணக்குப் புத்தகத்தை (ஏற்புடையதாகுமிடத்து) புதுப்பிப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ கணக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள பிழையான பதிவுகள் பற்றுக்கள் (ரிவர்ஸ் என்ட்ரி) மூலம் வங்கியால் மீளப் பெறப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இரத்துச் செய்யப் படலாம்.

38. இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, வங்கியின் வழமையான வியாபார நிபந்தனைகளில் உள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கணக்கு வைத்திருப்பவர் கட்டுப்பட்டுள்ளார். இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயத்திற்கும், கணக்கு வைத்திருப்பவர் பொதுவான வியாபார நிபந்தனைகளைப்படித்துப் பார்க்க வேண்டும் எனக் கோரப்படுகிறார்.

44. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களால் நிர்வகிக்கப்படும் என்பதுடன் கணக்கு வைத்திருப்பவர் இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக அதிகார வரம்பிற்கு உடபட்டிருக்க வேண்டும்.

நேஷன்ஸ் மெக்ஸ் போனஸ் சேவை கணக்குத் திட்டம் தொடர்பான இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் இங்கு கையொப்பமிடுவதற்கு முன்பு எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது என்பதை நான்/நாங்கள் இதன் மூலம் உறுதி செய்கிறேன்/றோம். மேலும் இந்த நியதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் □□பரங்களை நான்/நாங்கள் வாசித்து, புரிந்துகொண்டு ஒப்புக்கொண்டுள்ளதுடன் அவற்றுக்குக் கட்டுப்படுவதற்கான எனது/எமது விருப்பத்தை நான்/நாங்கள் இத்தால் வெளிப்படுத்துகிறேன்/றோம்.

……………………………………………… ……………………………………………..

வாடிக்கையாளரின் கையொப்பம் வாடிக்கையாளரின் கையொப்பம்

……………………………………………… ……………………………………………..

வாடிக்கையாளரின் கையொப்பம் வாடிக்கையாளரின் கையொப்பம்